Vol : 9

இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

Issue : 4

Price Rs. 3

# HUNDRED VILLAGE MINISTRY

FEBRUARY 2009

హండ్రడ్ విల్లేజ్ మినిస్ట్రి

हन्ड्रेड विल्लेज मिनिस्ट्री ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

Annual Subscription India Rs.25 Foreign Rs.250

# 100- கிராம ஊழியம்

**TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை**




**TVGM - 2009 பிப்ரவரி**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

**நீங்கள் . . .**
**கர்த்தருடைய**
**நாமத்தைத்**
**துதிப்பீர்கள்.**

யோவேல் 2 : 26

கரூர் – சமத்துவபுரம் **சின்னபனையூரில்** கட்டி முடிக்க வேண்டிய ஜெபவீட்டையும், ஊழியர் **சாம்சன் ஐய்யப்பன்** குடும்பத்தையும் 25.12.2008 அன்று **சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்** மற்றும் **சகோ. P.T. கிறிஸ்டோபர்** நேரடியாக பார்வையிட்டு ஜெபித்தார்கள்.



# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

## TAMIL VILLAGE GOSPEL MISSION

**Chief Executive officer** **Letter Dated: 15.01. 2009**



கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே!

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

இந்த மாதத்தை ஜெபத்துடன் ஆரம்பிப்பது மட்டுமல்லாமல், கர்த்தர் நமது வாழ்க்கையில் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்த கடமைப்பட்டவர்களாய் இருக்கிறோம். கர்த்தர் அவருடைய அனைத்து செயல்களிலும் உண்மையுள்ளவராக இருக்கிறார். அவருடைய கிருபை நம்மை சூழ்ந்திருக்கிறது. நம்முடைய எல்லா போராட்டங்கள் மத்தியிலும், கஷ்டத்தின் மத்தியிலும் கர்த்தர் நமக்கு நல்லவராகவே இருந்தபடியால் தேவனைத் துதிக்க வேண்டும்.

இந்த மாதத்தை ஜெபத்துடன் ஆரம்பிப்பது மட்டுமல்லாமல், அநேக ஆலயமில்லாத கிராமங்களை போய் பார்வையிடவும், ஆலயம் கட்டுவதற்கு பொருளுதவி செய்கிறவர்களை எழுப்பவும் திட்டமிட்டு கொண்டிருக்கிறோம். எங்களுடைய விருப்பம் என்னவென்றால் **கிராமங்கள் தோறும் ஆலயங்கள் எழும்பி, கர்த்தருடைய ராஜ்யம் கட்டப்பட வேண்டும்** என்பதாகும். நீங்கள் ஜெபத்தினாலும், பொருளுதவியினாலும் கிராமங்களில் ஆலயம் கட்டப்படுவதற்கு உதவும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் நிர்வாக வசதிக்காக **'கிறிஸ்தவ தலைமைத்துவ மையம்'** தனி அமைப்பாக அரசாங்கத்தில் பதிவு செய்ய முயற்சித்து வருகிறோம். தயவுசெய்து இதற்கொரு சரியான பெயரை தெரிந்தெடுத்து டிரஸ்ட்டாக பதிவு செய்ய ஜெபியுங்கள். அத்துடன் இதனுடைய கமிட்டியில் தரிசனம் பெற்றவர்களை கர்த்தர் கொடுக்கும்படி ஜெபியுங்கள். இந்த டிரஸ்ட் சம்பந்தமான அனைத்து வேலைகளும் சரியாக நடைறெ ஜெபித்துக் கொள்ளுங்கள். **கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

கிறிஸ்துவின் பணியில்

***Stephen Christopher***

**TVGM அலுவலக சேவைக்கு அர்ப்பணித்தவர்கள் தேவை!**

1. அக்கவுண்டென்ட், தமிழ் – ஆங்கிலம் டைப் தெரிந்தவர்கள், கம்ப்யூட்டர், Tally / வேறு அனுபவமுள்ளவர் தேவை.
2. 1 முதல் 12 வரை படிக்கும் சிறுவர் இல்லப் பிள்ளைகளை கவனிக்க வார்டன் குடும்பம் தேவை.
3. நன்கு சமைக்க தெரிந்தவர் தேவை.
4. வீடியோ எடுக்கவும், எடிட் செய்யவும் தெரிந்த சகோதரர் தேவை.
5. அம்பாசிட்டர் கார் டவுணில் ஓட்டி அனுபவமுள்ள டிரைவர் தேவை.
6. Photoshop / வெப் டிசைனர் தேவை.

**தொடர்பு முகவரி : TVGM, 100-Village, Somarasampettai, Trichy-102.**

வாக்குத்தத்த செய்தி

# நீங்கள் . . . கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள். யோவேல் 2 : 26

புத்தாண்டிற்குள் பிரவேசித்து, 1 மாதத்தை முடித்து 2வது மாத வாக்குத்தத்தத்திற்காக ஆவலோடு காத்துக் கொண்டிருக்கும், கர்த்தரின் ஊழியக்காரரே, விசுவாசிகளே, ஸ்தாபனத் தலைவர்களே!

இந்த மாதத்தில் கர்த்தர் உங்களுக்கு கொடுக்கும் வாக்குத்தத்தம்:

**யோவேல் 2:26**

**நீங்கள் . . . கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள்.** ஆமென்.

**யோவேல் 1:4**

பச்சைப்புழு விட்டதை வெட்டுக்கிளி தின்றது; வெட்டுக்கிளி விட்டதைப் பச்சைக்கிளி தின்றது; பச்சைக்கிளி விட்டதை முசுக்கட்டைப்பூச்சி தின்றது.

என்ற வசனத்தின்படி சோதனைக்கு மேல் சோதனை, வேதனைக்குமேல் வேதனையை சந்தித்துக் கொண்டிருக்கும் கர்த்தருடைய பிள்ளையே! **உங்களைத் தேற்றுவதற்காகவே** கர்த்தருடைய வசனம் கடந்து வருகிறது.

ஒன்று போனால், ஒன்று வருகிறது என்று புலம்பிக் கொண்டிருக்கும் சகோதரியே, சகோதரனே!

நீங்கள் சீக்கிரம் கர்த்தருடைய நாமத்தை விடுதலையோடு துதிப்பீர்கள். தேவனாகிய கர்த்தர் எங்களை அதிசயமாய் நடத்தினார் என்று சாட்சி கூறப் போகிறீர்கள். உங்கள் காரியத்திலெல்லாம் ஒரு திருப்தியை காணப் போகிறீர்கள்.

கர்த்தருடைய வசனத்தை சம்பூரணமாகச் சாப்பிட்டு திருப்தியடைந்து, வசனத்தின்படி உங்களை அருமையாக நடத்தப் போகிற உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள்.

**பக்தன் பாடுகிறார்:-**

**துதிப்பேன், துதிப்பேன்,**<br>**துதித்துக் கொண்டேயிருப்பேன்.**<br>**என்றும் ஆனந்தம்,**<br>**என் இயேசு தருகிறார்,**<br>**துதிப்பேன், துதிப்பேன்**<br>**துதித்துக்கொண்டே இருப்பேன்**

நீங்களும் துதிக்கப் போகிறீர்கள்.

**சங்.13:6** கர்த்தர் எனக்கு நன்மை செய்தபடியால் அவரைப் பாடுவேன்.

பக்தன் பாடுவது போல் நீங்களும் பாடப் போகிறீர்கள்.

**"அல்லேலூயா, அல்லேலூயா**<br>**பாடுவேன்.**<br>**ஆனந்த துதியால் உயர்த்துவேன்".**<br>**ஜெயங்கொடுக்கும் தேவனுக்கு,**<br>**கோடி கோடி ஸ்தோத்திரம்.**<br>**வாழ்வளிக்கும் இயேசு ராஜாவுக்கு**<br>**வாழ்நாளெல்லாம் ஸ்தோத்திரம்.**

வேதம் சொல்கிறது: **சங் 147:1**

துதித்தலே இன்பமும்<br>ஏற்றதுமாயிருக்கிறது.

**ஏசாயா43:21** இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன் இவர்கள் என் துதியை சொல்லி வருவார்கள். ஆமென்

இந்த மாதத்தில் **'துதியை'**ப் பற்றி வேதம் கூறும் உண்மைகளைப் பார்ப்போம்.

**கர்த்தரை ஏன் துதிக்க வேண்டும்?**

**<u>பெரியவர் – பயப்படத்தக்கவர்</u>**

**1நாளா. 16:25** கர்த்தர் பெரியவரும் மிகவும் துதிக்கப்படத்தக்கவருமாயிருக் கிறார்; எல்லா தேவர்களிலும் பயப்படத் தக்கவர் அவரே.

**1நாளா 16:26** சகல ஜனங்களுடைய தேவர்களும் விக்கிரகங்கள்தானே; கர்த்தரோ வானங்களை உண்டாக் – கினவர். ஆமென்.

**<u>நல்லவர் – கிருபையுள்ளவர்</u>**

**1நாளா.16:34** கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது.

**<u>பொல்லாதவர்களின் கைக்குத் தப்புவிப்பவர்</u>**

**எரேமியா 20:13** கர்த்தரைப் பாடுங்கள், **கர்த்தரைத் துதியுங்கள்;** அவர் எளியவனுடைய ஆத்துமாவைப் பொல்லாதவர்களின் கைக்குத் தப்புவிக்கிறார்.

**<u>கர்ப்பம் தரிக்கச் செய்கிறவர்.</u>**

**ஆதி. 29:31** லேயாள் அற்பமாய் எண்ணப்பட்டாள் என்று கர்த்தர் கண்டு, அவள் கர்ப்பந்தரிக்கும்படி செய்தார்.

ஆம் ரூபன், சிமியோன், லேவி ஆகிய மூன்றுபேரைப் பெற்றெடுத்தாள்.

**ஆதி.29:35** மறுபடியும் அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று: இப்பொழுது **கர்த்தரைத் துதிப்பேன்** என்று சொல்லி, அவனுக்கு யூதா என்று பேரிட்டாள்.

கர்த்தரைத் துதிப்பதற்கு தேவன் செய்த முதல் அற்புதம் குழந்தைச் செல்வம்.

**என் அன்பு சகோதரியே, சகோதரனே 2009ம் ஆண்டு நீங்கள் . . . கர்த்தருடைய நாமத்தை துதிப்பீர்கள். இன்றைக்கே விசுவாசத்தோடே கர்த்தரை துதிக்க ஆரம்பியுங்கள்.**

லேயாள் அற்பமாக எண்ணப் பட்டதை கர்த்தர் கண்டார்.

லேயாளின் தேவன் உங்கள் தேவன். கணவனும் மனைவியுமாக இருவரும் சேர்ந்து கண்ணீரோடு இருக்கிறீர்களா ?

அல்லது கணவனால் நிந்திக்கப்பட்டு வேதனையோடு இருக்கிறீர்களா ?

அல்லது மாமன், மாமியாரால் வெறுக்கப்பட்டு மனம் உடைந்து போய் இருக்கிறீர்களா ?

அல்லது உறவினர்களால், நண்பர்களால் நெருக்கப்பட்டு இருக்கிறீர்களா ?

என் அன்பு சகோதரனே, சகோதரியே, தேவ ஊழியரே !

புதிய ஏற்பாட்டின் காலத்தில் நடந்த முதல் அற்புதத்தைப் பாருங்கள்.

**லூக்கா 1:6** சகரியாவும் அவன் மனைவியும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின் படியேயும் நியமங் களின் படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து தேவனுக்கு முன்பாக நீதியுள்ள வர்களாயிருந்தார்கள்.

**லூக்கா 1:13** தூதன் அவனை நோக்கி; சகரியாவே, பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது. உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள்.

இதே ஆசீர்வாதத்தை இந்த ஆண்டில் கர்த்தர் உங்களுக்கும் கட்டளையிடுவார்.

## எப்பொழுதெல்லாம் துதிக்க வேண்டும்?

**சங்கீதக்காரன் கூறுவதைக் கேளுங்கள்:**

**சங்.35:28** என் நாவு உமது நீதியையும், **நாள் முழுவதும்** உமது துதியையும் சொல்லிக் கொண்டிருக்கும்.

**சங்.71:8** என் வாய் உமது துதியினாலும், **நாள்தோறும்** உமது மகத்துவத்தினாலும் நிறைந்திருப்பதாக.

**சங்.55:17 அந்திசந்தி மத்தியான வேளைகளிலும்** நான் தியானம் பண்ணி முறையிடுவேன்; அவர் என் சத்தத்தைக் கேட்பார்.

**சங்.84:4** உம்முடைய வீட்டில் வாசமாயிருக்கிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் **எப்பொழுதும்** உம்மை துதித்துக் கொண்டிருப்பார்கள்.

**சங்.63:4** என் **ஜீவனுள்ள மட்டும்** நான் உம்மைத் துதித்து, உமது நாமத்தைச் சொல்லிக் கைகளையெடுப்பேன்.

**ஆலயத்திற்கு அஸ்திபாரம் போடும் போது துதியுங்கள்.**

**எஸ்றா 3:11** கர்த்தர் நல்லவர், இஸ்ரவேலின் மேல் அவருடைய கிருபை என்றுமுள்ளதென்று அவரைப் புகழ்ந்து துதிக்கையில், மாறிமாறிப் பாடினார்கள்; கர்த்தரைத் துதிக்கையில், ஜனங்கள் எல்லோரும் கர்த்தருடைய ஆலயத்தின் அஸ்திபாரம் போடப்படுகிறதினிமித்தம் கெம்பீரமாய் ஆரவாரித்தார்கள்.

சங்கீதக்காரன் ஒரு கேள்வி எழுப்புகிறார்:

சங்.106:2 ‘‘கர்த்தருடைய வல்லமையான செய்கைகளைச் சொல்லி அவருடைய துதியையெல்லாம் பிரதாஸ்தாபப்படுத்தத் தக்கவன் யார் ?

**இந்த கேள்விக்கு உங்கள் பதில் என்ன ?**

## துதியினால் விடுதலை

**அப்.16:25,26** நடுராத்திரியிலே பவுலும், சீலாவும் ஜெபம்பண்ணி தேவனைத் துதித்து, பாடினார்கள். காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும் படியாக பூமி மிகவும் அதிர்ந்தது. உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது. எல்லாருடைய கட்டுகளும் கழன்று போயிற்று.

என் அன்பு சகோதர, சகோதரிகளே!

நடுராத்திரியிலே, தேவனைத் துதித்துப் பாடும் கிருபையை கர்த்தரிடத்தில் கேளுங்கள். மற்றவர்களுக்கு தொந்தரவு கொடுக்காமல் நீங்கள் தேவனோடு உறவாட வசதிகள் இருந்தால் வாய்ப்புகளை தவற விடாதீர்கள். கூடுமானால் வசதி வாய்ப்புகளை உருவாக்குங்கள்.

**பக்தன் பாடுகிறார்:**

**விடுதலை முழங்கிடுவோமே**
**விக்கினம் யாவுமகலும்**
**இடுக்கண்கள் சூழ்ந்திடும் வேளை**
**இரட்சகர் மீட்பருள்வாரே**
**நுகங்கள் முறிந்திடும்**
**கட்டுகளறுந்திடும்**
**விடுதலை பெருவிழா காண்போம்.**
**ஆனந்த துதி ஒலி கேட்கும்**
**ஆடல் பாடல் சத்தமும் தொனிக்கும்.**

பாடுங்கள், பாடிக்கொண்டேயிருங்கள்.

**நீங்கள் . . . கர்த்தருடைய நாமத்தை துதிப்பீர்கள்.**

**தேவனுக்கே மகிமை!**

**குறிப்பு:** கர்த்தர் செய்யும் மகத்துவத்தை உங்கள் போட்டோவுடன் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

## உன் ஊழியத்தை நிறைவேற்று. 2 தீமோ. 4 : 5

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் **'வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்'** இலவசமாக வழங்கி **இயேசுவை**அறிவித்தல்.

## சேலம் மாவட்டம் - ஏற்காடு யூனியன்
## 100 - கிராம ஊழியம்

**நோக்கம்:** **2009 பிப்ரவரி 16** திங்கள் காலை 9 மணி முதல் **பிப்ரவரி 20** வெள்ளி இரவு 10 மணி முடிய **சேலம் மாவட்டம் – ஏற்காடு யூனியனில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் : 2009 பிப்ரவரி 16** திங்கள் காலை **9 - 1**

**கடைசி நாள் ஜெபம் : 2009 பிப்ரவரி 20** வெள்ளி இரவு **7 - 10** முடிய

**( 2009 பிப்ரவரி 16 - 20 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**உபவாச ஜெபம் நடைபெறும் இடம்**

**அற்புதர் இயேசு ஜெபவீடு**
**லாங்கிலிபேட்டை - 636 606.**
**ஏற்காடு போஸ்ட்,**
**சேலம் மாவட்டம்.**
**போன் : 04290 - 239026 செல் : 93457 25347**

**நன்றி** : உதவி செய்ய முன் வந்த **Rev. குளோரிதாஸ்** அவர்களுக்கு நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் **5** நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி** : தமிழ்நாட்டிலிருந்து ரூ. **5** செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு** : 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும். **எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும்** : சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், **100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94435 - 44628**

# திருச்சி - துறையூர் யூனியன் 100-கிராம ஊழியம் அறிக்கை



கர்த்தருடைய கிருபையால், **திருச்சி–துறையூர்** யூனியனில் 15.12.2008 முதல் 19.12.2008 வரை **100– கிராம ஊழியம்** மிகவும் ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல்நாள், கடைசி நாள் கூடுமிடம், உணவு, இனிப்பு இவைகளை **துறையூர் ஜீவனுள்ள தேவனுடைய சபை போதகர் D. ஜேம்ஸ்** அவர்கள் பொறுப்பெடுத்துக் கொண்டு உதவி செய்தார்கள். தமிழ்நாட்டின் 15 மாவட்டங்களிலிருந்து 50 பேர் இந்த கிராம ஊழியத்தில் கலந்து கொண்டனர்.

முதல்நாள் ஆரம்ப ஜெபத்தில் துறையூர் யூனியனிலுள்ள கிராமங்களின் பெயர்களை வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. **துறையூர் ஜீவனுள்ள தேவனுடைய சபையின் போதகர் D. ஜேம்ஸ்** தேவசெய்தி கொடுத்தார்கள். இதன் பின் கிராம ஊழியர்களை 12 குழுவாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவினரும் தனித்தனியாக தாங்கள் ஊழியம் செய்யப் போகும் கிராமத்திற்காக ஜெபித்தார்கள். மதிய உணவிற்கு பிறகு அவரவர் ஊழியம் செய்ய வேண்டிய கிராமங்களுக்கு அனுப்பப்பட்டனர். இவர்கள் போய் கிராமங்களில் **5** நாட்கள் தங்கிக் கொண்டு, வீட்டிற்கொரு யோவான் சுவிசேஷப் புத்தகம் இலவசமாக வழங்கி இயேசுவை அறிவித்தார்கள். இந்த யூனியனில் மொத்தம் 12,382 யோவான் சுவிசேஷப் புத்தகங்கள், 20,000 கைப்பிரதிகள், 10,000 சிலுவைக்கொடிகள் இலவசமாக வழங்கி இயேசுவை பிரஸ்தாபப்படுத்தினார்கள்.



ஊழியங்களை முடித்து, மீண்டும் கடைசிநாளில் கூடி ஜெபித்து, கர்த்தர் தங்களை எப்படி கிராமங்களில் பயன்படுத்தினார் என்று சாட்சி சொன்னார்கள். இதன்பின் TVGM சார்பில் கிராம ஊழியர்களுக்கு பிரயாணப்படியும், கிறிஸ்மஸ் வெகுமதிகளும் வழங்கப்பட்டது. TVGM காரியதரிசி **ஸ்டீபன் கிறிஸ்டோபர்** மற்றும் Sis. **ஜெயசீலி கிறிஸ்டோபர்** அவர்களும் கலந்து கொண்டு கிராம ஊழியர்களுக்காக ஜெபித்து, கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள் கூறினார்கள்.



இவ்ழியத்தின் போது 203 புறமத நண்பர்கள் தங்கள் விலாசங்களைக் கொடுத்து, தபால் மூலம் வேதபாடங்களை அனுப்பும்படியாக கேட்டுக் கொண்டார்கள்.

## கிராம ஊழியர்களின் சில அனுபவ சாட்சிகள்

**குழு 1: சகோதரி மேரி செல்லாபாய், மணியம்மாள், லீதியாள், தேவகிருபை, சலோமி சம்மனசு.**

கோவிந்தாபுரம் ஊராட்சியிலுள்ள 10 கிராமங்களில் எல்லா வீடுகளுக்கும் யோவான் புத்தகம் கொடுத்தோம். யாவரும் வாஞ்சையோடு வாங்கினார்கள். அநேகர் ஜெபிக்கக் கேட்டார்கள். எண்ணெய்ப் பூசி ஜெபித்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 860 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 2: சகோதரி டோரா லாசர், அந்தோணிமேரி, அமிர்தம், ஷீலா.**

செல்லிப்பாளையம் கிராமத்தில் வீடு வீடாக சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். கண்டக்டர் ஒருவர் எங்களை அவர் வீட்டிற்கு அழைத்துப் போய் சுகவீனமாக இருந்த தனது தகப்பனாருக்காக ஜெபிக்கச் சொன்னார். அவருடைய 7 வயது மகள் வாய் பேசவில்லை. அதற்காகவும் ஜெபித்தோம். ஒரு பெண்மணியிடம் இந்த தெருவின் பெயர் என்ன ? என்று கேட்டு ஒரு சுவிசேஷப் புத்தகத்தைக் கொடுத்தோம். தெருவின் பெயரை சொல்லி விட்டு உங்கசாமி எங்களுக்கு வேண்டாம் என்று கூறி தாறுமாறாக பேசினாள். இப்பகுதியில் 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 820 சிலுவைக்கொடியும் கொடுத்தோம்.

**குழு 3: சகோ.இஸ்ரவேல் வீமன், ஏசுதாஸ், ஸ்டீபன்ராஜ், யோசுவா, எபினேசர்.**

கீரம்பூர் ஊராட்சியிலுள்ள 8 கிராமங்களில் வீடுவீடாக சுவிசேஷம் கூறி, புத்தகங்களைக் கொடுத்தோம். எங்களை கிராம மக்கள் வரவேற்று, ஆர்வமுடன் சுவிசேஷப் புத்தகங்களை வாங்கிக் கொண்டார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 825 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 4: சகோதரி மரியம்மாள், ஜோதி மணி, தெபோராள், செலின் ஜெயபால்.**

மதுராபுரி ஊராட்சியிலுள்ள கிராமங்களுக்கு சென்று சுவிசேஷம் அறிவித்து, வீடுவீடாக யோவான் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். எல்லோரும் அன்புடன் வாங்கினார்கள். அநேகர் எங்களிடம் ஜெபிக்கக் கேட்டார்கள். அவர்களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 830 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 5: சகோதரி எஸ்தர் கனகாம்புஜம், கிளமெண்ட்ஸ்மேரி, தேவநேசம், அந்தோணிமேரி.**

நாங்கள் சென்ற கிராமங்களில் ஒரு சிலரைத் தவிர, மற்றவர்கள் சத்தியத்தைக் கேட்டு சந்தோஷமாக யோவான் சுவிசேஷப் புத்தகத்தைப் பெற்றுக் கொண்டார்கள். அதிக தூரம் நடந்து திரிந்து அநேகருக்கு ஜெபித்தோம். சிலர் எங்கள் தெய்வத்திற்கும், உங்கள் தெய்வத்திற்கும் ஒத்துவராது என்று சொன்னார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 845 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 6: சகோதரி வசந்தா ஸ்டீபன், அன்னக்கிளி, கிரேஸ்பத்மா, மீரா.**

கண்ணனூர் ஊராட்சியிலுள்ள 8 கிராமங்களில் வீடுவீடாக சென்று சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். அநேக வீடுகளில் ஜெபித்தோம். நாயக்கர் இன மக்கள் வசிக்கும் தெருவிற்கு சென்று சுவிசேஷம் அறிவித்தோம். எங்கள் குழுவில் தெலுங்கு தெரிந்த ஒரு சகோதரி அவர்களுடன் தெலுங்கில் சுவிசேஷம் சொன்னபோது, ஆர்வமுடன் அவர்கள் கேட்டார்கள். 975 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**<u>குழு 7:</u> பாஸ்டர் அமல்ராஜ், சகோ.ஆரியப்பன், சூசை மாணிக்கம், இஸ்தாக்கி.**

சொக்கநாதபுரம், குறும்பப்பட்டி, அய்யம்பாளையம், கெம்பியம்பட்டி ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்து, வீடுவீடாக புத்தகம் கொடுத்தோம். குறும்பப்பட்டியில் மகேஸ்வரி என்ற சகோதரிக்கு சுவிசேஷம் சொன்னபோது, அவர் ஏற்றுக் கொண்டு தன்னை இயேசுவுக்கு ஒப்புக் கொடுத்தார். கோவிந்தராஜ் என்ற வாலிபனை அசுத்த ஆவி பிடித்திருந்தது. இவனுக்காக ஜெபித்தபோது, கர்த்தர் விடுதலைக் கொடுத்தார். மொத்தம் 1080 சுவிசேஷப் புத்தகங்கள், 820 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**<u>குழு 8:</u> சகோதரி கஸ்தூரி சுப்பையா, மேரி மீனா, மரியாள், ரூத் பகவதி.**

வீரமச்சான்பட்டி ஊராட்சியிலுள்ள கிராமங்களில் சென்று <u>ஊழி</u>யம் செய்தோம். கல்லுக்குடி கிராமத்தில் சில ஆண்களும், பெண்களும் எங்களை போய் விடுங்கள், நாயை அவிழ்த்து விடுவோம், கடித்தால் எங்களால் ஒன்றும் செய்ய இயலாது. ஆகவே போய் விடுங்கள் என்று விரட்டி விட்டார்கள். அநேக பரீட்சை எழுதுகிற பிள்ளைகளுக்காக ஜெபித்தோம். அநேகர் குடும்ப கஷ்டங்களை சொல்லி ஜெபிக்கக் கேட்டனர். நாங்கள் சென்ற கிராமங்களில் மக்கள் ஏழைகளாக, விவசாயம் செய்கிறவர்களாக இருந்தார்கள். மொத்தம் 650 சுவிசேஷப் புத்தகங்கள், 825 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**<u>குழு 9:</u> சகோ.தாஹாகனி, ஸ்டேன்லி, ஜான் முத்துமணி, ஜோசப் முரளிதரன்.**

நாங்கள் **8** கிராமங்களில் சுவிசேஷம் சொல்லி, வீடுகள்தோறும் யோவான் புத்தகம் கொடுத்தோம். வாஞ்சையுள்ள ஆத்துமாக்களுக்காக ஜெபித்தோம். இரவில் நாங்கள் தங்கியிருந்த வீட்டிற்கு அநேகர் ஜெபிக்க வந்ததால் அங்கு ஜெபக் கூட்டம் நடத்தினோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 840 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**<u>குழு 10:</u> சகோதரி டெய்சி மரகதம், கிருபா பழனியம்மாள், பிச்சையம்மாள், எஸ்தர் பேபி.**

நாங்கள் சென்ற கிராமங்களில் மக்கள் எங்களை ஏற்றுக் கொண்டு, ஆர்வமுடன் சுவிசேஷப் புத்தகங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.அநேக மக்களின் பிரச்சனைகளுக்காக ஜெபித்தோம். **ராஜம்மாள்** வீட்டிலுள்ள மாடு கடந்த 2 மாதமாக பால் கறந்த பிறகு அந்த பால் நிறம் மாறி கெட்டுப் போவதாக சொல்லி, ஜெபிக்கக் கேட்டார்கள். நாங்கள் ஜெபித்தோம். தேவன் அற்புதமாக நல்ல பாலாக மாற உதவி செய்தார். தேவனுக்கே மகிமை. மொத்தம் 850 சுவிசேஷப் புத்தகங்களும், 850 சிலுவைக்கொடியும் கொடுத்தோம்.

**<u>குழு 11:</u> பாஸ்டர் ஆல்வின், சகோ.ஜெபமலைநாதன்,பீட்டர், தாவீது.**

முருகூர், எரக்குடி, சங்கம்பட்டி, கோணப்பாதை, சிறுநத்தம் கிராமங்களில் வீடுகள்தோறும் யோவான் புத்தகம் கொடுத்து, சத்தியத்தை அறிவித்தோம். மக்கள் ஆர்வமுடன் வாங்கினார்கள். சில வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 830 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**<u>குழு 12:</u> சகோ.மாற்கு மாரியப்பன், சாம்ராஜ், மகாராஜன், அந்தோணி.**

சிக்கத்தம்பூர் ஊராட்சியிலுள்ள கிராமங்களில் <u>ஊழி</u>யம் செய்தோம். எந்த எதிர்ப்பும் இல்லை. பலருக்கு ஜெபித்தோம். தேவன் எங்கள் ஊழியத்தை ஆசீர்வதித்து தந்தார். 1827 சுவிசேஷப் புத்தகங்கள், 855 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை!**

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

## துதி, கனம், மகிமை - இயேசு கிறிஸ்துவுக்கே!

### விசுவாசிகள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

1. Sis. **விஜிலா, திண்டுக்கல்.**

என் மகன் பள்ளியிலிருந்து பேருந்தில் வரும் போது கீழே தவறி விழுந்து விட்டான். தலையில் பலத்த அடி. மருத்துவர்கள் முதலுதவி செய்துவிட்டு, வேறு மருத்துவமனைக்கு கொண்டு போக சொன்னார்கள். வேறு மருத்துமனைக்கு சென்றோம். அவனுக்கு 7 தையல்கள் போட்டனர். அவனுடைய காதிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்ததால் ஸ்கேன் எடுத்தனர். ஸ்கேன் ரிப்போர்ட்டில் எந்த பாதிப்பும் இருக்கக் கூடாது, சாட்சி எழுதுவேன் என பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு சுகம் தந்தார். தேவனுக்கே மகிமை.

2. Sis. **தங்கம்மாள், நாகர்கோவில்.**

என் மருமகள் ஒரு நிறுவனத்தில் வேலைப் பார்த்துக் கொண்டிருந்தாள். திடீரென்று அந்த வேலை போய் விட்டது. அதனால் அவள் தொடர்ந்து படிக்க ஆயத்தப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில், 2007 செப்டம்பர் மாத "100–கிராம ஊழியம்" பத்திரிக்கை கிடைத்தது. அதிலுள்ள **"இன்று அவர்கள் கண்களுக்கு முன்பாக உன்னை மேன்மைப்படுத்துவேன்"** என்ற வாக்குத்தத்த வசனத்தின்படியே மீண்டும் அதே நிறுவனத்தில் வேலை கிடைத்தது.

3. Sis. **புஷ்பாகுமாரி, காப்புக்காடு.**

எனக்கு சுகப் பிரசவம் நடந்தால் 100–கிராம ஊழியத்திற்கு சாட்சி எழுதுவேன் என பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் சுகப்பிரசவத்தில் அழகான பெண்குழந்தையை தந்தார்.

4. Sis.**லீமா ரோஸ், ஒரத்தநாடு.**

நான் 1 1/2 வருடங்களாக ரேஷன் கார்டு வாங்குவதற்காக முயற்சித்தேன். ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். நானும் ரேஷன் கார்டு கிடைத்தால் சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்தேன். கர்த்தர் கிடைக்கும்படி செய்தார்.

5. Sis.**மைக்கேல்ராஜ், சென்னை.**

நான் சிறையில் இருந்தபோது, 2008 டிசம்பர் மாத இதழ் கிடைத்தது. அதிலிருந்த **"என்னை நோக்கிக் கூப்பிடு; அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்"** என்ற வசனத்தின்படியே எனக்கும் நண்பருக்கும் விடுதலை கிடைத்தது.

### புறமத நண்பர்கள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

1. Bro.**கார்த்திக், அரியலூர்.**

என் அம்மாவின் நெஞ்சுவலி குணமாகவும், அண்ணனுக்கு சம்பள உயர்வு கிடைக்கவும், அக்காவிற்கு திருமணம் நடைபெறவும் ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். தாங்களும் ஜெபித்தீர்கள். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு அம்மாவுக்கு பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். அண்ணனுக்கு சம்பள உயர்வு கிடைத்தது. அக்காவின் திருமணம் 15.12.2008 அன்று சிறப்பாக நடைபெற்றது. தேவனுக்கே மகிமை.

2. Sis.**ராமலட்சுமி, புளியங்குளம்.**

நான் +2வில் அதிக மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற ஜெபிக்கக் கேட்டிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு 1028 மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற உதவி செய்தார்.

## TVGM பின்தொடர்பணி ஊழியங்கள் . . *Stephen Christopher*

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் ஒவ்வொரு மாதமும் தமிழகத்திலுள்ள ஒரு யூனியனை தேர்ந்தெடுத்து, அந்த யூனியனிலுள்ள கிராமங்களுக்கு “100–கிராம ஊழியம்” திட்டத்தின் மூலம் **வீட்டிற்கொரு யோவான் சுவிசேஷம்** இலவசமாக வழங்கி இயேசுவை அறிவித்து வருகிறோம். இந்த ஊழியத்தின்போது சந்திக்கும் புறமத நண்பர்களின் விலாசங்களை சேகரித்து அவர்களுக்கு டி.வி.ஜி.எம். தலைமை அலுவலகத்திலிருந்து தபால் மூலம் **“சமாதானம் தரும் தேவன் இயேசு, மனிதனின் முக்கிய பிரச்சனைகள், பாவமும் அதின் விளைவும்”** ஆகிய புத்தகங்கள் அடுத்தடுத்து அனுப்பப்படுகிறது. இதைப் படித்து வாஞ்சையோடு கடிதம் எழுதுபவர்களுக்கு **“இயேசுகிறிஸ்துவின் மரணத்தினால் உண்டாகும் ஆசீர்வாதம், ஆவிக்குரிய வாழ்க்கையின் அவசிய தேவை”** இதுபோன்ற டாக்டர் செல்வின் அவர்கள் எழுதிய புத்தகங்களும், தொடர்ந்து அவர்கள் கிறிஸ்துவுக்குள் வளர்வதற்கு ஏதுவான ஆவிக்குரிய புத்தகங்களும் அனுப்பப்படுகிறது.

இதுபோக, ஏதாவது ஒருவிதத்தில் TVGM ஊழியங்களைக் குறித்து கேள்விப்பட்டு, கடிதம் மூலம் வாஞ்சையோடு தொடர்பு கொள்ளும் புறமத நண்பர்களுக்கும் இவ்வாறு அடுத்தடுத்து வேதபாடம் அனுப்பப்படுகிறது. இவ்வாறு அனுப்பப்படும் வேதபாடங்களை படித்து அநேக புறமத நண்பர்கள் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களில் சகோதரர் கணேசன் அவர்களின் அனுபவ சாட்சியை மட்டும் இங்கு பிரசுரித்துள்ளோம். வாசித்து தேவனை மகிமைப்படுத்துங்கள். **பின்தொடர்பணி ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.**



என் பெயர் **கணேசன்.** நான் சமாதானம் இல்லாமல், இயேசுவைப் பற்றி நினைக்காமல் சினிமா உலகத்தில் வாழ்ந்து வந்தேன். சினிமா தான் என் வாழ்க்கை என்று எண்ணினேன். என் தாய், தந்தை எனக்கு நல்வழி காட்டவில்லை. சினிமாவால் நான் மிகவும் பாதிக்கப்பட்டு, காமவெறியன் ஆகிவிட்டேன். எந்த தொழிலும் என்னால் செய்ய முடியவில்லை. வாழ்க்கையில் எதற்கும் உதவாதவனாகி விட்டேன்.

இந்த நிலையில் ஒரு சகோதரன் மூலமாக TVGM ஊழியங்களை பற்றி கேள்விப்பட்டு கடிதம் எழுதினேன். அப்பொழுது திருச்சி– டி.வி.ஜி.எம் தலைமை அலுவலகத்திலிருந்து முதலாவதாக “சமாதானம் தரும் தேவன் இயேசு” என்ற புத்தகத்தை அனுப்பினார்கள். அதை படித்த போது ‘**கொதிக்கும் பாறையின் மீது ஓர் நீரூற்று**’ என்பது போல் எனக்கு இருந்தது.

என் வாழ்க்கையில் நான் செய்த பாவங்கள் எண்ணிலடங்காதது. நான் ஒரு பாவி என்று உணர்ந்தேன். எனக்கு சமாதானம் உண்டானது. தொடர்ந்து எனக்காக ஜெபிக்கும்படி கடிதம் எழுதினேன். திருச்சியிலிருந்து எனக்கு அடுத்தடுத்து வேதபாடப் புத்தகங்கள் அனுப்பினார்கள். அந்த புத்தகம் எனக்கு நல்வழி காட்டியது. என் கவலைக்கு மருந்தாக இருந்தது. நானும் அவ்வப்போது புத்தகத்தை படித்து, அதிலுள்ள கேள்விகளுக்கு பதில் எழுதி வந்தேன். இவ்வாறாக இயேசுகிறிஸ்துவைக் குறித்து அறிந்து வருகிறேன். இப்பொழுது 16வது வேதபாடப் புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறேன். நான் முழுவதும் இயேசுவின் பிள்ளையாக இருக்கிறேன். **தேவனுக்கே மகிமை!**

**இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்;**
**இவர்கள் என் துதியைச் சொல்லிவருவார்கள்.** ஏசாயா 43:21.

## TVGM 12 மணி நேர துதி ஆராதனை / வாக்குத்தத்த தேவசெய்தி

**நாள் :** 01.02.2009 ஞாயிற்றுக்கிழமை

**துதி ஆராதனை நேரம் :** காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை

**வாக்குத்தத்த செய்தி :** மாலை 7 மணி முதல் 8 மணி வரை

**நடைபெறுமிடம் : TVGM தலைமை அலுவலகம்,**
**100 – கிராமம்,**
**திருச்சி – 620 102.**

சபை பாகுபாடின்றி அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

### கிறிஸ்மஸ் அன்பளிப்புகளுக்காக நன்றி கூறுகிறோம்!

சிறுவர் இல்லப் பிள்ளைகள், தன்னார்வத் தொண்டர்கள், முழுநேர ஊழியர்கள், தொழுநோயாளர்கள், விதவைகளை நினைவு கூர்ந்து காணிக்கையினாலும், அன்பளிப்புகளினாலும் உதவி செய்த கர்த்தருடைய பிள்ளைகளுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியை உள்ளத்தின் ஆழத்திலிருந்து தெரிவித்துக் கொள்கிறோம். **தேவனுக்கே மகிமை!**

### 2009 பிப்ரவரி மாத இயேசுவை விரும்புவோர் முகாம்

மாவட்டம் : திருநெல்வேலி
யூனியன் : ராதாபுரம்
நாள் : 07.02.2009 சனி
நேரம் : காலை 9 மணி

**நடைபெறும் இடம்**

**பாஸ்டர் . அன்பழகன்**
**ஜெபவீடு,**
**ராஜன் ஆஸ்பத்திரி சந்து,**
**திசையன்விளை – 627 657.**
**திருநெல்வேலி மாவட்டம்.**
**செல் : 9942972732**

**ஆலயத்தைக் கட்டுங்கள்; அதின்பேரில் நான் பிரியமாயிருப்பேன், அதினால் என் மகிமை விளங்கும். ஆகாய் 1:8**



புதுக்கோட்டை – **கறம்பக்குடியில்** ஜெபவீடு கட்டுவதற்கான நிலத்தை **30.12.2008 அன்று சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபருடன், ஆடிட்டர் ஜான் ராஜசேகரன், மற்றும் சகோ. வசீகரன்** பார்வையிட்டு ஜெபித்தார்கள்.



தஞ்சை – புதுக்கோட்டை மாவட்டம் திருவோணம் கிராமத்தில் நடைபெற்று வரும் TVGM தையற்பள்ளியை **சகோ. ஸ்டீபன், சகோ. வசீகரன், ஆடிட்டர் ஜான்,** பார்வையிட்டு, தேவசெய்தியளித்து, ஜெபித்து சான்றிதழ் வழங்கினார்கள்.



U.K. ஏல்பெத்தேல் ஸ்தாபகர் **பாஸ்டர் ராஜ்குமார்** அவர்கள் சகோ. C.I. தாமஸ் அவர்களுடன் TVGM– ஐ பார்வையிட்டு அலுவலக சகோதரிகளுக்கு தேவசெய்தியளித்தார்கள்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் இடிந்து போய் கிடக்கும் ஊழியரின் வீட்டை எடுத்துக் கட்டித் தருவதற்கு முன்வந்துள்ள Newburypark **இம்மானுவேல் கிறிஸ்தவ ஐக்கியம்** சபை மக்களுக்காகவும், கமிட்டியினருக்கும், நேரடியாக பார்வையிட்ட **பாஸ்டர் பால்** குடும்பத்தினருக்கும் நன்றி.




**T.V.G.M.குமரி மாவட்ட அறிமுகப்பணிஅலுவலகம்,**

**5 / 3A** கிரவுண் தெரு, வாத்தியார் விளை, நாகர்கோவில் – 629 001.

**செல் : 98658 26424 போன் : 04652- 277251.**

# 'கிறிஸ்தவ தலைமைத்துவ மையம்'

## ( இன்றைய நிலை - 15.01.2009 )

2009 ஜனவரி மாத **"100–கிராம ஊழியம்"** மாதாந்திர பத்திரிக்கையில் **'TVGM ஒரு கிறிஸ்தவ தலைமைத்துவ மையம்' –** அமைக்க திட்டமிடுவது ஏன் ? என்பதை பற்றி எழுதியிருந்தேன். இந்த மாதத்தில் அதன் வளர்ச்சியைக் குறித்து எழுதுகிறேன்.

கர்த்தருடைய கிருபையினால் TVGM கமிட்டி உறுப்பினர்களுடனும் மற்றும் முக்கிய கிறிஸ்தவ தலைவர்களுடனும் கலந்து ஆலோசித்து வருகிறோம். அநேகருடைய ஆலோசனையின் அடிப்படையில் **'கிறிஸ்தவ தலைமைத்துவ மையம்'** TVGM சிறுவர் இல்ல மாணவ, மாணவியருக்கு மட்டுமல்லாமல், மற்றவர்களுக்கும் பயன்படும் வகையில் புதிய பொதுவான பெயரில் தனி டிரஸ்ட்டாக இயங்குவது நல்லது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு அடிப்படைத் தேவையான பின்வரும் குறிப்புகளை உங்கள் ஜெபத்திற்காக எழுதுகிறேன்.

1. **'கிறிஸ்தவ தலைமைத்துவ மையம்'** அமைப்பதற்கு உலக அளவில் செயல்படுவதற்கு பொருத்தமான ஒரு பொதுவான பெயரை கர்த்தர் தரும்படி ஜெபியுங்கள்.

2. முதல் கமிட்டி அமைப்பதற்கு தரிசனம் பெற்ற கர்த்தருடைய பிள்ளைகளை அடையாளம் கண்டு கொள்ள ஜெபியுங்கள்.

3. இதனுடைய நோக்கம், செயல்பாடுகள், சட்டத்திட்டங்கள் யாவும் தேவனுடைய வெளிப்பாட்டின் படியும், அரசாங்க ஒழுங்கின்படியும் எழுதப்பட்டு டிரஸ்ட்டாக பதிவு செய்யப்பட ஜெபியுங்கள்.

4. இதனுடைய நிர்வாகத்தை கவனிக்க ஆரம்பத்திலேயே தரிசனம் பெற்ற உதவியாளர்களை கர்த்தர் கொடுக்கும்படியாக ஜெபியுங்கள்.

5. இதற்கு தேவைப்படும் பொருளாதாரத்தை பரத்திலிருந்து கர்த்தர் கட்டளையிடும்படியாக ஜெபியுங்கள்.

6. இத்திட்டம் நிறைவேற அடிப்படை தேவையான நிலங்கள் கர்த்தருக்குச் சித்தமான இடத்தில் போதுமான அளவு வாங்கப்படுவதற்கு வழிவாசலை கர்த்தர் திறக்கும்படி ஜெபியுங்கள்.

7. மிக முக்கியமாக, இத்திட்டங்களும், தரிசனங்களும் நிறைவேற ஜெபிக்கிற, துதிக்கிற மக்களை கர்த்தர் எழுப்ப கருத்தாய் ஜெபியுங்கள்.

**'கிறிஸ்தவ தலைமைத்துவ மையம்'** என்றால் என்ன ? என்ற விளக்கத்தை வருகிற மாதங்களில் எழுதுகிறேன். இந்த தரிசனத்தோடு இணைந்து செயல்பட நல்ல அனுபவமுள்ள ஆலோசகர்கள் அநேகரை கர்த்தர் எழுப்ப ஜெபியுங்கள். **தேவனுக்கே மகிமை!**

*....Stephen Christopher*

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.**

**"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது". யாக்.** 5:16

# தினசரி ஜெபக்குறிப்புகள்

**திங்கள்:** கோடாவிளை – முதியோர் இல்லம் மூலம் அநேக ஆதரவற்ற, ஏழை முதியோர்கள் பயன்பெறவும், அங்கு ஊழியம் செய்ய அர்ப்பணித்து, குடும்பமாக வந்துள்ள பாஸ்டர் ஷிபு அவர்களுக்காகவும், திருச்சி, குண்டல் ( கோடாவிளை ) சிறுவர் இல்லத்தில் படிக்கும் பிள்ளைகளுக்கு சிறந்த கல்வி மற்றும் ஆவிக்குரிய பயிற்சியளிக்கப் பட்டு தேவனுக்கு சாட்சியாக எழும்பவும் ஜெபியுங்கள்.

**செவ்வாய்:** TVGM ஊழியத்தில் மார்ச் 31 கணக்கு முடிக்கும்போது எந்தவித கடனும் இல்லாமல் முடிக்கப்பட்டு, தொடர்ந்து அக்கவுண்ட் எழுதுவதற்கு தேவன் தமக்கு சித்தமான நபரை கொண்டுவரும்படியாக ஜெபியுங்கள்.

**புதன்:** TVGM நிர்வாக அலுவல கத்தில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் கட்டிட வேலைக்காக, **சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபருக்கு** நிர்வாகத்தை நடத்துவதற்கு ஏற்ற ஞானத்தையும், கிருபைகளையும் தேவன் அருளும்படியாக ஜெபியுங்கள்.

**வியாழன்:** ஆலயமில்லாத கிராமத்தில் ஜெபவீடு கட்டுவதற்காக புதிதாக விண்ணப்பித்தவர்களின் இடங்களை போய் பார்வையிடவும், ஏற்கெனவே திட்டமிட்ட இடங்களில் ஜெபவீடு கட்டப்படவும், தேவையான பொருளா தரத்தை தேவன் சந்திக்கவும் ஜெபியுங்கள்.

**வெள்ளி:** 2009ம் ஆண்டு TVGM ஊழியத் திட்டங்களுக்காக, விசேஷமாக **தலைமைத்துவ பயிற்சி மையம்** தனி டிரஸ்ட்ராக பதிவு செய்யப்படவும், ஏற்ற நாட்களில் இதன் மூலம் அநேக ஆவிக்குரிய கிறிஸ்தவ தலைவர்கள் உருவாக்கப்படவும் ஜெபியுங்கள்.

**சனி:** TVGM புதிய கமிட்டியில் தரிசனம் பெற்ற தேவப்பிள்ளைகள் இணைக்கப்பட, தலைமை அலுவலகப் பணிக்கு தேவன் தமக்கு சித்தமான வர்களை கொண்டு வர ஜெபியுங்கள்.

**ஞாயிறு:** 2009ம் ஆண்டு **பின்தொடர்பணி** ஊழியத்தின் மூலம் அநேக புறமத நண்பர்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டு, சாட்சியாக எழும்ப ஜெபியுங்கள்.

## தினந்தோறும் ஜெபியுங்கள்!

1. டி.வி.ஜி.எம். – டிரஸ்டுக்கு FCRA ஆர்டர் கிடைக்க ஜெபியுங்கள். முதலாவது தற்காலிக ஆர்டராவது கிடைக்க ஜெபத்துடன் முயற்சித்து வருகிறோம்.
2. டி.வி.ஜி.எம். சோஷியல் சர்வீஸ்க்கு 80G ஆர்டர் கிடைக்க ஜெபியுங்கள்.
3. சிறுவர் இல்லத்திற்கு சலுகை விலையில் அரிசி வாங்க கடந்த 3 வருடங்களாக D.S.O அலுவலகத்தில் முயற்சிக்கிறோம். ஜெபியுங்கள்.
4. டி.வி.ஜி.எம். புதிய திட்டமான **தலைமைத்துவ பயிற்சி மைய**த்திற்கு தேவைப்படும் நிலங்கள் வாங்கப்பட ஜெபியுங்கள்.

# எழுந்து கட்டுவோம் வாருங்கள்!

**கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!** *P.T.Christopher*

கர்த்தருடைய ஜெபவீடு கட்டுவதற்கு 2008ம் ஆண்டில் கைகொடுத்த ஒவ்வொருவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக!

கர்த்தருடைய கிருபையினால் 2008ல் உத்தேசமாக 26 ஜெபவீடுகளும், 2 தற்காலிக ஜெபவீடும் கட்ட கர்த்தர் கிருபை செய்தார். **பாஸ்டர் ஜோசப் ஜெபமணி** அவர்கள் மூலம் 12 ஜெபவீடுகள் கட்டப்பட்டது.

**பாஸ்டர் விக்கி** அவர்கள் மூலம் 4000 இலங்கை அகதிகளுக்கு உணவுப் பொருட்கள் வழங்க கர்த்தர் கிருபை செய்தார்.

2008ம் ஆண்டை எங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாது. ஜெபித்த கொடுத்த, உழைத்த, அறிமுகப்படுத்திய ஒவ்வொருவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. தேவனுக்கே மகிமை!

மேலும் 2008 மே மாதம் அமெரிக்கா தேசத்திற்கு நானும் என் மனைவி ஜெயசீலியும் சென்று மகன் ஸ்டீபன் கிறிஸ்டோபருடைய M.A.Intercultural Studies in Mission Graduation Service-ல் கலந்து கொள்ள கிருபை செய்தார்.

2008 நவம்பர் / டிசம்பரில் இம்மானுவேல் கிறிஸ்தவ ஐக்கியத்தின் போதகர் பாஸ்டர் எபி மூலம் U.K. தேசத்திற்கு செல்லவும், ஊழியத்தை நிறைவேற்றவும் கர்த்தர் கிருபை செய்தார்.

2009ம் ஆண்டு '**கிறிஸ்தவ தலைமைத்துவ மையம்**' அமைக்க வேண்டும் என்ற பாரத்தை மகன் ஸ்டீபன் கிறிஸ்டோபருக்கு கர்த்தர் கொடுத்துள்ளார். இந்த ஆண்டில் **'கல்வி நிறுவனம்'** பற்றிய தரிசனம் உள்ளவர்களை தேவன் வெளிப்படுத்த ஜெபியுங்கள்.

முதல் கட்டமாக **5 ஏக்கர் நிலம்** வாங்க திட்டமிட்டுள்ளோம். கிராமத்தில் மிகக் குறைந்த விலை **ரூ.12 லட்சமாக** உள்ளது. ஆதலால் **ரூ.1 லட்சம் கொடுக்கக்கூடிய 12 பேரை** கர்த்தர் எழுப்பும்படி ஜெபியுங்கள்.

இதே நேரத்தில் **'ஜெபவீடு கட்டுமானப்பணி'** வழக்கம்போல, தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருக்கும்.

2008 ஜனவரி முதல் 2009 ஜனவரி 15 வரை 60கிராம ஊழியர்கள் ஜெபவீடு கட்டித் தரும்படி தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலிருந்து விண்ணப்பித்துள்ளார்கள். நாங்கள் நேரடியாக பார்வையிட்ட கிராமங்கள் 12 ஆகும். இன்னும் 48 கிராமங்களை பார்வையிட வேண்டியுள்ளது. TVGM மூலமாகவோ அல்லது கிராம ஊழியர்களின் பிரயாசத்தின் மூலமாகவோ 2009ல் கர்த்தருக்கு சித்தமான கிராமங்களில் **'ஜெபவீடு'** கட்டப்பட ஜெபியுங்கள்.

ஒருவருக்கும் நாங்கள் வாக்குக் கொடுப்பதில்லை. கர்த்தர் உங்கள் மூலம் பொருளாதார வாசலைத் திறந்தால் கட்டிக் கொடுப்போம். அப்படியா னாலும், கிராம ஊழியரின் பெரும்பங்கும், ஒத்துழைப்பும் இருந்தால் மட்டுமே நாங்கள் **'ஜெபவீடு'** அவர்களுக்கு கட்டி கொடுக்க முடியும். **ஜெபியுங்கள்.**

மிக முக்கியமாக 2008ம் ஆண்டிலும் அதற்கு முன்னதாகவும் ஆரம்பிக்கப்பட்டு, இன்னும் முடிவடையாமல் இருக்கும் ஜெபவீட்டிற்காக ஜெபியுங்கள்.

1. திருச்சி மாவட்டம் – **சூரியக்குடி** 50% வேலை நடைபெற்றுள்ளது.

2.திருச்சி – **பொன்மலைப்பட்டி** பாஸ்டர் தேவக்குமார் ( சீயோன் விசுவாச அசெம்பிளி ) வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

3. புதுக்கோட்டை மாவட்டம் – **விராச்சிலை** ( திறக்க முடியாமல் தவிக்கிறோம்)

4. நெல்லை மாவட்டம் – **காவூர்** ( கடையம் பாஸ்ட்ரேட்டில் சபை மக்கள் உற்சாகமாக செயல்படுகிறார்கள். முடியும் தருவாயில் உள்ளது.

5. கரூர் மாவட்டம் – **சமத்துவபுரம்** சின்னப்பனையூர், இம்மானுவேல் ஜெபவீடு கர்த்தருக்குச் சித்தமானால் 10.02.2009 காலை 10மணிக்கு திறக்க ஜெபியுங்கள்.

6. புதுக்கோட்டை மாவட்டம் – **பொன்னமராவதி, வேந்தன்பட்டியில்** ஜெபவீடு 25% மட்டுமே துவங்கப்பட்டுள்ளது. முடியவில்லை.

7.லால்குடி அருகிலுள்ள **பெருவளநல்லூர்** பழைய ஓலை ஜெபவீட்டில் பாம்பு வருகிறது என மிகுந்த துக்கத்தோடு போதகர் அமல்ராஜ் கூறினார். நானும் நேரடியாக பார்வையிட்டேன். கட்டாயமாக கட்டப்பட வேண்டியதொன்றாகும்.

8. புதுக்கோட்டை மாவட்டம் – **கறம்பக்குடியில்** போதகர் அந்தோணி JMHA சபையில் ஊழியம் செய்கிறார். ஸ்தாபனம் பெயரில் நிலம் வாங்கியுள்ளார்.

**குடும்பமாக கர்த்தருக்கு ஒரு ஆலயத்தை கட்டித் தர முன்வரும்படி அன்புடன் அழைக்கிறேன்.**

## கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு காணிக்கை அனுப்பும் முறை

**TAMIL VILLAGE GOSPEL MISSION (100-** கிராம ஊழியம், ஜெபவீடு)

**T.V.G.M. SOCIAL SERVICE** (சிறுவர் இல்லம், ஏழைகளுக்கு உதவி)

**T.V.G.M. PUBLICATION** ( பத்திரிக்கை சந்தா, அச்சகம்)

ஸ்தாபனத்தின் பெயரில் டிராப்ட் எடுக்க முடியாவிட்டால் தயவுசெய்து

**MR. STEPHEN CHRISTOPHER, SB 1249101 18538 CANARA BANK,**

**Code : 1249 Puthur Branch, TRICHY, PIN - 620 017, Tamil Nadu.**

**என்ற பெயரில் டிராப்ட் எடுத்து, கடைசி பக்கமுள்ள TVGM தலைமை அலுவலக முகவரிக்கு நோக்கத்தையும் உங்கள் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை குறிப்பிட்டு அனுப்பி உதவுங்கள்.**

**எங்கள் Email: 100village@tvgm.org- மூலம் தெரியப்படுத்துங்கள்.**

**Canara Bank Indian Financial System Code( IFSC ):CNRB 0001249**

Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

POSTAL REGISTRATION NUMBER
TRY / 013 / 2009 - 2011
Posting Date 25th at H.P.O. Trichy.

## TVGM சிறுவர் இல்லம்



2008 டிசம்பர் மாதத்தில் TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகளை பார்வையிட்டு சிறப்பு உணவளித்த **திருமதி பூரண லட்சுமி அம்மாள்** ( பேரன் & மருமகள் பிறந்தநாள் ), அவர்களுக்கும், பிள்ளைகளுக்கு விருப்பமான பொருட்களை வாங்கிக் கொடுத்த **சகோ. பார்த்தசாரதி** குடும்பத்தினருக்கும், சிறுவர் இல்லப் பிள்ளைகளின் கிறிஸ்மஸ் சிறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு குடை மற்றும் அன்பளிப்புகள் வழங்கிய **ஆடிட்டர் ஜான்** அவர்களுக்கும், பிள்ளைகளுக்கு நோட்டு, பென்சில், ஸ்கேல் வழங்கிய **கிருஷ்ணா பேப்பர் மார்ட்** மற்றும் **சகோதரி மாலினி இன்பசெல்வன்** அவர்களுக்கும் சிறுவர் இல்லப் பிள்ளைகளின் சார்பாக எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

**கர்த்தர் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக!**

TVGM தலைமை அலுவலக முகவரி
ஜெபஉதவி மற்றும் சகல தொடர்புகளுக்கும்:-
MR.STEPHEN CHRISTOPHER,
CHIEF EXECUTIVE OFFICER
TAMIL VILLAGE GOSPEL MISSION
100- VILLAGE ( Veeranginallur Road )
SOMARASAMPETTAI,(Hospital Stop)
TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.

STD Ph : 0-431 - 2607241
FAX : 0-431- 2607446
Email :
100village@tvgm.org

Website :
www.tvgm.org

தினசரி வாக்குத்தத்தம், செய்தி மற்றும் கிராம ஊழிய அறிக்கை வெளியிடப்பட்டு வருகிறது.

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011

HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
ഹൺഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി हन्ड्रेड विलेज मिनिस्ट्री